# அசைவாடும்

# அதிசயங்கள்

## நம்பிக்கை மற்றும் அற்புதங்கள் நிறைந்த கதைகள்



Jesus.net



# ஹலோ!

நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம். அது **நம்பிக்கையாகவோ, மன ஆறுதலாகவோ, நோயிலிருந்து குணமடைதலாகவோ, அல்லது உங்கள் வாழ்வில் ஒரு திருப்புமுனையாகவோ** இருக்கலாம்.

அல்லது ஒருவேளை, அற்புதங்கள்—அல்லது நாங்கள் **அதிசயங்கள்** என்று அழைப்பவை—இன்றும் நிகழ்கின்றனவா? அல்லது கடவுள் இருக்கிறாரா? நாம் காணவும், உணரவும் கூடிய வழிகளில் அவர் இன்னும் செயல்பட்டு வருகிறாரா? என்று நீங்கள் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்கலாம்.

**ஆண்டவருடைய அற்புதங்களின் வல்லமையை ஆராய்ந்து பார்க்க** நான் உங்களை அழைக்கிறேன். பழங்கால வேதாகமக் கதைகளில் மட்டுமல்ல, உங்கள் சொந்த வாழ்க்கையிலும் கூட.

தொடங்குவதற்கு உங்களுக்கு வேதாகமம் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. வெவ்வேறு போராட்டங்களையும் அதைத் தொடர்ந்து நடந்த அற்புதங்களையும் கொண்ட **ஆறு கதைகளை** வேதாகமத்திலிருந்து நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளோம்.

**கேள்விகள் உள்ளதா?**

எங்களைத் தொடர்புகொள்ளத் தயங்காதீர்கள்—எதையும் எங்களிடம் கேளுங்கள்!



ஒவ்வொரு கதையும் உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களையும் உள்ளுணர்வுகளையும், பிரதிபலிப்புகளையும் வழங்குகிறது.

நீங்கள் **ஒரு அற்புதத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தாலோ** அல்லது குணம் பெற வேண்டிக்கொண்டிருந்தாலோ அல்லது வாழ்வின் அர்த்தத்தை தேடிக்கொண்டிருந்தாலோ, ஆண்டவரின் அன்பும் வல்லமையும் உங்கள் வாழ்விற்குள் வந்து சேர்வதற்கு இதுவே உங்களுக்கான வாய்ப்பு.

ஆண்டவரால் என்ன செய்ய முடியும் என்பதைக் காண நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?




## கேம்ரன் & ஜெனி

*அனுதினமும் ஒரு அதிசயம் எழுத்தாளர்கள்*

# கிறிஸ்துவை இதுவரை நீங்கள் அறியாதவராக இருந்தால், இந்தப் பக்கத்தைப் படியுங்கள்!

**ஒருவேளை நீங்கள் கிறிஸ்தவத்திற்குப் புதியவராக இருந்தால், இந்த மின்-புத்தகத்தை நீங்கள் வசதியாக வாசிப்பதை உறுதிசெய்ய விரும்புகிறோம். சில அடிப்படைகளிலிருந்து தொடங்குவோம்!**

## வேதாகமத்திலிருந்து கதைகள்

இந்த மின்-வழிகாட்டியில் இடம்பெற்றுள்ள அற்புதங்கள் பைபிளிலிருந்து எடுக்கப்பட்டவை. வேதாகமம் (பைபிள்) என்பது 1,500 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் 40 வெவ்வேறு எழுத்தாளர்களால் எழுதப்பட்ட 66 புத்தகங்களின் தொகுப்பாகும். அது இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

**பழைய ஏற்பாடு:**
*படைப்பு முதல் இயேசு பிறந்த காலம் வரை, இஸ்ரவேல் மக்களுடன் கடவுளுக்கு இருந்த உறவின் கதையை இது சொல்கிறது.*

**புதிய ஏற்பாடு:**
*இயேசு கிறிஸ்துவின் போதனைகள், அவரது வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் தொடக்ககாலத் திருச்சபை ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.*

## இயேசு யார்?

இயேசு கிறிஸ்துவே கிறிஸ்தவ விசுவாசத்தின் முதன்மைத் தலைவர் ஆவார். அவர் தேவனின் அன்பை நமக்குக் காட்டவும், எப்படி வாழ வேண்டும் என்று கற்பிக்கவும், மனிதகுலத்தைக் காப்பாற்றவும் வந்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.

## பைபிள் குறிப்புகள்

இந்த மின்புத்தகத்தில், “யோவான் 9:3” போன்ற பைபிள் (வேதாகம) குறிப்புகளைக் காண்பீர்கள். அதன் பொருள்:
**[வேதாகமப் புத்தகத்தின் பெயர்] [அதிகாரம்]:[வசன எண்]. வேதாகமத்தை நீங்கள் எளிதாகப் படித்துப் புரிந்துகொள்ள இது ஒரு சுலபமான வழி!**



# 1 கடனில் இருந்த ஒரு விதவை

பண்டைய இஸ்ரவேலில் ஒரு விதவையாக இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். உங்கள் கணவர் இறந்துவிட்டார். உங்களுக்கு இரண்டு மகன்கள் இருக்கிறார்கள், ஆனால் அவர்களைப் பராமரிக்க உங்களிடம் வழியில்லை.

ஒரு நாள், உங்கள் வீட்டில் அமர்ந்து, எப்படிப் பிழைப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, கதவைத் தட்டும் சத்தம் உங்களை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. நீங்கள் கதவைத் திறக்க, கோபமாகவும் மிரட்டலாகவும் ஒரு கடன் கொடுத்தவர் நிற்கிறார். உங்கள் கடனை வசூலிக்க வந்திருப்பதாக அவர் கூறுகிறார். ஆனால் ஒரு சிக்கல்: உங்களிடம் பணமில்லை.

செலுத்த வழியும் இல்லை. இப்போது, கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரை, உங்கள் ஒரே பிள்ளைகளான உங்கள் மகன்களை அடிமைகளாகப் பிடித்துச் செல்ல அவர்கள் விரும்புகிறார்கள்.

நீங்கள் எப்படி உணர்வீர்கள்? உதவியற்றவராகவா? பயந்தவராகவா? விரக்தியடைந்தவராகவா?



வேதாகமத்தில் ஒரு பெண் தன்னை இந்தச் சூழ்நிலையில்தான் காண்கிறாள். அவள், ஒரு காலத்தில் எலிசா தீர்க்கதரிசிக்குப் பணிபுரிந்த ஒருவரின் விதவை. தன் உடலில் உடுத்தியிருந்த ஆடையையும், தன் பிள்ளைகள் மீதான அன்பையும் தவிர வேறு எதுவும் இல்லாத நிலையில், அவளால் சிந்திக்க முடிந்த ஒரே காரியத்தைச் செய்கிறாள்: அவள் தேவனுடைய தீர்க்கதரிசியான எலிசாவைத் தேடிச் செல்கிறாள்.

**“தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்துபோனான்; உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொள்ளவந்தான் என்றாள்.”**

2 இராஜாக்கள் 4:1

இந்த விரக்தியான தருணத்தில், எலிசா அனுதாபம் காட்டுவதாகத் தெரியவில்லை. அவளுடைய கடனை அடைப்பதாகவோ, அல்லது அவளுடைய நம்பிக்கையற்ற சூழ்நிலையிலிருந்து அவளை மீட்பதாகவோ அவர் வாக்குறுதி அளிக்கவில்லை. மாறாக, அவர் அவளிடம் ஒரே ஒரு எளிய கேள்வியைக் கேட்கிறார்:

**உங்கள் வீட்டில் என்னென்ன இருக்கிறது?**



அந்த விதவை, “ஒன்றுமில்லை… ஒரு குடுவை எண்ணெயைத் தவிர” என்று பதிலளிக்கிறாள். அதன் சிறிய அளவைக் கண்டு எலிசா மனம் தளர்ந்ததாகத் தெரியவில்லை. மாறாக, அவர் அவளுக்கு அறிவுறுத்துகிறார்:

**“நீ போய், உன்னுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும்பாத்திரங்களைக் கேட்டுவாங்கி, உள்ளேபோய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான்.”**

2 இராஜாக்கள் 4:3-4

அந்தப் பெண் தனக்குச் சொல்லப்பட்டபடியே செய்கிறாள். இது எப்படி உதவும் என்று தெரியாமலேயே, அவள் எலிசாவை விட்டுவிட்டு ஜாடிகளை சேகரிக்கிறாள். பிறகு, தன் வீட்டிற்குத் திரும்பியதும், கதவை சாத்திவிட்டு ஊற்றத் தொடங்குகிறாள்.

ஒவ்வொரு முறை ஊற்றும்போதும் எண்ணெய் வழிந்துகொண்டே இருந்தது. அது தீர்ந்துபோகவே இல்லை. ஜாடி ஜாடியாக நிரம்பியது. அவள் முதல் ஜாடியையும், பிறகு இரண்டாவது, பிறகு மூன்றாவது ஜாடியையும் பார்த்தாள்; நம்பமுடியாமல் அவள் கைகள் நடுங்கின. அவள் ஊற்ற ஊற்ற, எண்ணெய் பெருகிக்கொண்டே போனது. இறுதியாக, எல்லா ஜாடிகளும் நிறைந்ததும், அவள் தன் மகனிடம், “எனக்கு இன்னொன்றைக் கொண்டு வா” என்றாள்.



ஆனால் அவன், “ஒரு ஜாடி கூட மீதமில்லை” என்று பதிலளித்தான். பின்பு எண்ணெய் வழிவது நின்றது.

அவளுடைய அற்புதம் முழுமையடைந்தது. அவளுடைய மகன்கள் காப்பாற்றப்பட்டனர். கடன் அடைக்கப்பட்டது. ஒன்றுமே இல்லாதது போல தோன்றிய அந்தச் சிறிய அளவு எண்ணெய், அவளுடைய இரட்சிப்பிற்கான திறவுகோலாக மாறியது.

**உங்களிடம் என்ன இருக்கிறது?**

எலிசாவின் கேள்வி கவனத்தை ஈர்க்கிறது.

**நம்மிடம் இல்லாதவற்றின் மீது கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, எவ்வளவு சிறியதாகத் தோன்றினாலும், நம்மிடம் உள்ளவற்றைக் கருத்தில் கொள்ளுமாறு தேவன் நம்மிடம் கேட்கிறார்.**

பெரும்பாலும், நாம் வாழ்க்கையை ஒருவித பற்றாக்குறை உணர்வுடனே நான் அணுகுகிறோம்:

- என்னிடம் போதுமான பணம் இல்லை.
- எனக்கு சரியான திறன்கள் இல்லை.
- எனக்கு நேரமில்லை.
- எனக்கு நம்பிக்கை இல்லை.

எண்ணெய் எப்படிப் பெருகும் என்று அந்த விதவைக்குத் தெரியாது. அது பெருகுமா என்பதைக் கூட அவள் தெரிந்திருக்கவில்லை. ஆனால், எதையும் புரிந்துகொள்ளாமலேயே அவள் காட்டிய கீழ்ப்படிதல், ஆண்டவரின் அற்புதத்திற்கான கதவைத் திறந்தது.



### வாழ்க்கைக்கான பாடங்கள்:

- சிறு முயற்சிகள் பெரும் அற்புதங்களுக்கு வழிவகுக்கும். அந்த விதவையின் முதல் முயற்சி ஒன்றும் பிரம்மாண்டமானதாக இருக்கவில்லை—அது வெறும் செயல்படுவதற்கான விருப்பமாக மட்டுமே இருந்தது.
- கடவுளால் நம்மிடம் உள்ளதை பெருகச் செய்ய முடியும். நம்மிடம் எவ்வளவு இருக்கிறது என்பதல்ல விஷயம், மாறாக நாம் எவ்வளவு கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதே முக்கியம். உங்களிடம் உள்ளதைக் கொண்டு வாருங்கள், அவர் அதைப் பெருகச் செய்வார் என்று அவரை நம்புங்கள்.
- சமூகம் முக்கியமானது. அந்த விதவைத் தன் அண்டை வீட்டாரிடம் உதவி கேட்க வேண்டியிருந்தது. சில சமயங்களில், நமக்குத் தேவையான அற்புதங்கள் மற்றவர்களின் ஆதரவு மற்றும் தாராள மனப்பான்மையின் மூலமே கிடைக்கின்றன.



# சிந்தித்துப் பார்க்க வேண்டிய கேள்விகள்:

1

**உங்களுடைய “எண்ணெய் ஜாடி” எது?**

உங்களிடம் உள்ள மிகச்சிறிய பொருள் என்ன? கடவுளால் வல்லமையாகப் பயன்படுத்தக்கூடிய - ஆனால் நீங்கள் முக்கியமற்றதாக கருதும் ஒரு பொருளாகக்கூட அது இருக்கலாம்.

2

**உங்களிடம் என்ன குறை இருப்பதாக உணர்கிறீர்கள்?**

உங்கள் வாழ்க்கையில், உங்களிடம் ஏற்கனவே உள்ளவற்றின் ஆற்றலைக் கருத்தில் கொள்ளாமல், உங்களிடம் இல்லாதவற்றின் மீது கவனம் செலுத்தி வரும் பகுதிகள் ஏதேனும் உண்டா?

3

**நீங்கள் விசுவாசத்தோடு எடுத்து வைக்கவேண்டிய அடி எது?**

அது உறுதியற்றதாகவோ அல்லது சிறியதாகவோ தோன்றினாலும், இன்று உங்களால் நம்பிக்கையின் அல்லது கீழ்ப்படிதலின் ஒரு சிறிய படியை எடுக்க முடியுமா?

குறிப்பு

உங்கள் பதில்களைப் பற்றி யாரிடமாவது இலவசமாகவும், உங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமலும் பேச விரும்புகிறீர்களா? எங்கள் மின்-பயிற்றுநர்களுள் ஒருவரைத் தொடர்பு கொள்ளுங்கள்!

# மோசே

## அதிசயங்களால் நிறைந்த ஒரு வாழ்க்கை

யூத, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களில் ஒரு முக்கிய நபராக விளங்கும் **மோசேயின்** வாழ்க்கை **அற்புதங்களால் நிறைந்துள்ளது.** இந்தக் காலவரிசையை நீங்கள் ஆராயும்போது, அவருடைய பயணத்தில் சாத்தியமற்றது எவ்வாறு சாத்தியமானது என்பதையும், அது எவ்வாறு நம்பிக்கையையும் புதிய தொடக்கங்களையும் கொண்டு வந்தது என்பதையும் காண்பீர்கள்.

**குழந்தையாக மோசே உயிர் பிழைத்தது**

எகிப்தில் உள்ள எல்லா எபிரேய ஆண் குழந்தைகளையும் கொல்லும்படி பார்வோன் இட்ட கட்டளையிலிருந்து மோசே காப்பாற்றப்பட்டார் (யாத்திராகமம் 2).



**எரியும் புதரில் சந்திப்பு**

எரிகிற, ஆனால் சாம்பலாகாத ஒரு புதரை மோசே காண்கிறார் (யாத்திராகமம் 3). எகிப்தில் இருந்த அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்களை விடுவிப்பதற்காகக் கடவுள் அவரை அங்கு அழைக்கிறார்.

**பத்து வாதைகள்**

பார்வோன் மற்றும் எகிப்திய தெய்வங்கள் மீதுள்ள தமது வல்லமையையும் நியாயத்தீர்ப்பையும் வெளிப்படுத்தும் விதமாக, தேவன் எகிப்துக்குப் பத்து வாதைகளை அனுப்புகிறார் (யாத்திராகமம் 7-12).



மோசேயின் கதையைக் காணுங்கள்



# 2 செங்கடல் இரண்டாகப் பிளந்தது

இஸ்ரவேலர்கள் தலைமுறைத் தலைமுறையாக எகிப்தில் வாழ்ந்து வந்தனர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக, **அவர்கள் பார்வோனின் ஆட்சியின் கீழ் அடிமைகளாக உழைத்தனர்**, அவர்களின் உடல்கள் வலித்தன, உள்ளங்கள் நசுக்கப்பட்டன.

இருப்பினும், இத்தனைக்கு மத்தியிலும், **தேவன் அவர்களுடைய கதறலைக் கேட்டிருந்தார்.** அவர்களின் துன்பத்தைக் கண்டிருந்தார். மேலும், அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலைக்கு வழிநடத்திச் செல்லும்படி மோசேயை அழைத்தார், **அவர்களுக்குச் சொந்தமான ஒரு தேசத்தில் அவர்களை கொண்டுசேர்ப்பதாகவும் வாக்குறுதியளித்தார்.**

> **"அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்."**
>
> யாத்திராகமம் 3:7

இறுதியாக எகிப்தை, அதன் அடித்தளத்தையே உலுக்கிய தொடர்ச்சியான வாதைகளுக்குப் பிறகு, பார்வோன் இஸ்ரவேலர்களை வெளியேற அனுமதித்தான். களைப்புற்றிருந்தாலும் நம்பிக்கையுடன், இஸ்ரவேலர்கள் பாலைவனத்தை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கினர்.

ஆனால் விரைவில், **அச்சம் சூழ்ந்தது**. ஏனெனில் **பார்வோன் தன் மனதை மாற்றிக்கொண்டான்**. தனது அடிமைப் பணியாளர்களை அவ்வளவு எளிதில் போகவிட அவனால் முடியவில்லை, எனவே அவன் தனது படையைத் திரட்டி பாலைவனத்தில் அவர்களைத் துரத்திச் சென்றான்.

குதிரைக் குளம்புகளின் ஓசையும் இரதங்களின் சத்தமும் உரக்க ஒலித்துக்கொண்டிருக்க, இஸ்ரவேலர்கள் செங்கடலை அடைந்தார்கள்–அது ஒரு பரந்த, ஊடுருவ முடியாத நீர்நிலை. அவர்கள் சிக்கிக்கொண்டார்கள். **அவர்கள் செல்வதற்கு இடமில்லை.** ஓடுவதற்கு வழியில்லை.



**இஸ்ரவேலர்கள் மத்தியில் அச்சம் பரவியது. பீதி ஏற்பட்டது. அவர்கள் தப்பிக்க வழியின்றிச் சிக்கிக்கொண்டனர்.** அந்த விரக்தியின் தருணத்தில், அவர்கள் தங்கள் தலைவரான மோசேவிடம் திரும்பி, அவர்மீது குற்றம் சாட்டினர்:

> **“எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டுவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன?”**
>
> யாத்திராகமம் 14:11-12

அவர்களின் குரல்களில் அவநம்பிக்கை நிறைந்திருந்தது. **அவர்கள் மோசேயை நம்பியிருந்தார்கள், கடவுளை நம்பியிருந்தார்கள், ஆனால் இப்போது பேரழிவின் விளிம்பில் இருந்தார்கள்.** கடலுக்கும் ஒரு இராணுவத்திற்கும் இடையில் சிக்கி, இந்தப் பாலைவனத்தில் அவர்கள் இறந்துவிடுவார்களா?

**கடல் இரண்டாகப் பிளந்தது**

ஆனால், அவர்கள் தோல்வியடைவதற்காக தேவன் அவர்களை இவ்வளவு தூரம் கொண்டுவரவில்லை. கடலின் மேல் தன் கோலை நீட்டுமாறு அவர் மோசேவிடம் கூறினார் (யாத்திராகமம் 14:16).

மோசேயும் கீழ்ப்படிந்தார். அவர் தன் கோலை உயர்த்தினார், ஆண்டவரின் கட்டளையால், **செங்கடலின் நீர் பிரிந்தது.** கடல் இரண்டாகப் பிளந்து, இருபுறமும் உயர்ந்த நீர்ச் சுவர்களுடன், நடுவில் ஒரு உலர்ந்த பாதை உருவாகியது.

இஸ்ரவேலர்கள் வியப்புடனும், நடுக்கத்துடனும், சாத்தியமற்ற ஒரு காரியத்தில் அடியெடுத்து வைத்தனர். **ஆண்டவரின் மீட்பின்** மகத்தான வல்லமையால் சூழப்பட்ட அவர்கள், கடலின் நடுவில் வறண்ட தரையில் நடந்தனர்.

இஸ்ரவேலர்கள் மறுகரையை அடைந்தபோது, எகிப்திய இராணுவமும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தது. ஆனால் அதே கணத்தில், தேவன் அவர்கள்மேல் இருந்த தண்ணீரால் அவர்களை மூடி, தம் மக்களைக் காப்பாற்றினார். இஸ்ரவேலர்கள் மறுகரையில் நின்று, தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அச்சுறுத்தல் நீங்கிவிட்டது. **அவர்கள் விடுதலை பெற்றார்கள்.**

மோசேயின் கதையை இங்கே காணுங்கள்



**வாழ்க்கைக்கான பாடங்கள்:**

- **சாத்தியமில்லாதவற்றின் மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள்.** சில சமயங்களில், முன்னே செல்லும் பாதை சாத்தியமற்றதாகத் தோன்றும்போதும், முன்னோக்கிச் செல்லுமாறு தேவன் நம்மை அறிவுறுத்துகிறார்.
- **வழியே இல்லை என்று தோன்றும் போதும் ஆண்டவரால் ஒரு வழியை உண்டாக்க முடியும்.**
- **கீழ்ப்படிதல் அற்புதங்களுக்கான கதவைத் திறக்கிறது.** இஸ்ரவேலர்கள் சும்மா நின்று கொண்டு எல்லாம் நடக்கும் என்று நம்பியிருக்கவில்லை. மாறாக அவர்கள் செயல்பட வேண்டியிருந்தது. நாம் முன்னோக்கிச் செல்லும் வரை சில சமயங்களில் அற்புதங்கள் நிகழ்வதில்லை.
- **தேவன் அக்கறை கொண்டு இரட்சிக்கச் செயல்படுகிறார்.** செங்கடல் பிளந்த நிகழ்வானது, தேவன் நமது துன்பங்களைக் காண்கிறார், நமது கதறல்களைக் கேட்கிறார், மேலும் நாம் முன்னேறிச் செல்ல வழி தெரியாதபோதும் நம்மை விடுவிக்கச் செயல்படுவார் என்பதைக் காட்டுகிறது.

# கேள்விகள்:

1

### உங்கள் "செங்கடல்" என்பது எது?

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சிக்கிக்கொண்டது போலவோ, மிகுந்த மன அழுத்தத்துடனோ, அல்லது சாத்தியமற்ற தடைகளால் சூழப்பட்டது போலவோ உணரும் சூழ்நிலைகள் உண்டா?

2

### உங்களுக்கு விசுவாசம் தேவைப்படும் இடம் எது?

தற்போது அது சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், ஆண்டவர் ஒரு வழியை உருவாக்குவார் என்று நீங்கள் நம்ப வேண்டிய ஒரு விஷயம் எது?

**அதிசயங்கள் இத்தோடு முடிவடைவதில்லை. ஆண்டவர் தன் மக்களை கவனித்துக்கொள்கிறார். அவர் அவர்கள் மீது அக்கறை காட்டுகிறார் என்பதை அற்புத வழிகளில் வெளிப்படுத்துகிறார்:**

### கசப்பான நீர் இனிப்பானதாக மாறியது

செங்கடலைக் கடந்த பிறகு, இஸ்ரவேலர்கள் தாகத்தால் வாடினர். ஆனால், அங்கிருந்த தண்ணீர் கசப்பாகவும் குடிக்க முடியாததாகவும் இருந்தது. மோசே அந்தத் தண்ணீரில் ஒரு மரத்துண்டை எறிந்து, அதைக் குடிப்பதற்கு ஏற்றதாக மாற்றினார்.
(யாத்திராகமம் 15:25)

### பரலோகத்திலிருந்து வந்த ரொட்டியும் இறைச்சியும்

இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் பசியைக் குறித்து முறையிட, தேவன், தினமும் காலையில் வானத்திலிருந்து அப்பத்தைப் போன்ற மன்னா என்னும் உணவுப் பொருள் விழும்படி அனுப்பினார்.
(யாத்திராகமம் 16)

### பாறையிலிருந்து வந்த நீர்

இஸ்ரவேலர் தங்கள் தாகத்தைப் பற்றி முறையிட்டபோது, மோசே, ஆண்டவர் கட்டளையிட்டபடி தன் கோலால் ஒரு பாறையை அடித்தார், உடனே அந்தப் பாறையிலிருந்து அற்புதமாகத் தண்ணீர் பாய்ந்தது. (யாத்திராகமம் 17)

### தண்ணீர் திராட்சை இரசமாக மாறியது

ஆண்டவரின், கொடுக்கும் வல்லமை, மோசே மற்றும் இஸ்ரவேலர்களின் கதைகளில் மட்டும் காணப்படுவதில்லை. பல ஆண்டுகள் கடந்தப் பிறகு, இயேசு கிறிஸ்து ஒரு திருமணத்தின்போது தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றுகிறார்.

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" என்ற தொடரில் இந்த அற்புதத்தை நீங்கள் இங்கே காணலாம்.

**அனுதினமும் ஒரு அதிசயம்**

**உங்கள் வாழ்வில் அற்புதங்களை நிகழ்த்தும் தேவனுடைய வல்லமையை இன்றே கண்டறியுங்கள். எங்கள் தினசரி தியானத்திற்கு குழுசேருங்கள்:**
**ta.jesus.net/miracle**



# 3 சிங்கக் குகையில் தானியேல்

தன் வாழ்நாள் முழுவதையும் நேர்மையுடன், ஞானத்துடன் பிறருக்கு சேவை செய்து, தன்னைச் சுற்றியுள்ளவர்களின் நம்பிக்கையைப் பெற்று வாழும் ஒரு மனிதரை கற்பனை செய்து பாருங்கள். **தானியேல்** (கி.மு. 620–538) அப்படிப்பட்ட ஒரு மனிதராக இருந்தார். அவர் பாரசீக மன்னரின் **மதிப்பிற்குரிய ஆலோசகராகவும்**, தனது **ஞானம்**, **விசுவாசம்** மற்றும் அசைக்க முடியாத **நேர்மைக்காகவும்** அறியப்பட்டவர். அவரது பணி குறைபாடற்றது, மேலும் மன்னர் அவரை விலையேறப்பெற்றவராக கருதினார்.

அரசவையில் உள்ள மற்ற அதிகாரிகள் தானியேல் மீது பொறாமை கொள்கிறார்கள். தானியேல் தன் கடமைகளைக் கையாளும் விதத்தில் அவர்கள் ஏதேனும் தவறு கண்டுபிடிக்க முயல்கிறார்கள், ஆனால் அவர்களால் முடியவில்லை. **தானியேல் நம்பகமானவர்.** அவர் எந்த ஊழலோ தவறுகளோ இன்றி, தன் வேலையை சிறப்பாகச் செய்தார். **தானியேலின் மத நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயமாக இருந்தாலன்றி, வேறு எதற்காகவும் அவர் மீது குற்றம் சுமத்த முடியாது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.**

எனவே அவர்கள் ஒரு தந்திரமான திட்டத்தைத் தீட்டினார்கள். தானியேலுக்கு ஆண்டவர் மீது இருந்த பக்தியை அவர்கள் அறிந்திருந்ததால், **அரசனைத் தவிர வேறு யாரிடமும் பிரார்த்தனை செய்யக்கூடாது என்ற ஒரு சட்டத்தை அமலுக்கு கொண்டுவந்தார்கள்.** மீறினால், தண்டனை என்ன தெரியுமா? சிங்கக் குகையில் வீசப்படுவது. இது ஒரு வலை—தானியேல் கடவுளுக்கு உண்மையுள்ளவராக இருப்பார் என்று அவர்களுக்குத் தெரியும், எனவே அவர் சீக்கிரத்திலேயே அந்த வலையில் விழுவார் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். இருப்பினும், தானியேல் பின்வாங்கவில்லை.

> **“தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.”**
>
> தானியேல் 6:10



தானியேலின் தைரியம் வியக்க வைக்கிறது. தன்னை எப்போதும் வழிநடத்திய ஒரே விஷயமான, கடவுளுடனான தனது உறவுக்கு **உண்மையாக இருக்க** அவன் தீர்மானிக்கிறான். **விளைவுகள் எப்படி இருந்தாலும்**, அவன் தன் இயல்பை மாற்றிக்கொள்ளவில்லை.

அதிகாரிகள் **தானியேல் ஜெபித்துக் கொண்டிருக்கையில் அவனை பிடித்து,** அரசனுக்கு அவனது சட்டத்தை நினைவூட்டுகிறார்கள்—அரசனைத் தவிர வேறு யாரிடம் ஜெபம் செய்தாலும், அவன் சிங்கக் குகையில் எறியப்பட வேண்டும். மனம் வருந்திய அரசன், தானியேலைக் காப்பாற்ற ஒரு வழியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான், ஆனால் அவனால் முடியவில்லை. **தானியேலின் கடவுள் அவனைக் காப்பாற்றுவார்** என்று நம்பி, அவனைக் குகையில் எறியும்படி அவன் கட்டளையிடுகிறான். தானியேலின் விதியை மாற்ற முடியாதபடி, அதன் நுழைவாயில் ஒரு கல்லால் மூடப்படுகிறது.

முற்றிலும் கைவிடப்பட்டதாக தோன்றும் ஒரு சூழ்நிலையில், தானியேல் சிங்கங்களால் சூழப்பட்டு இரவைக் கழிக்கிறான். ஆயினும், **தானியேலுக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை.** மறுநாள் காலையில், அரசன் தானியேல் உயிருடன் இருப்பதைக் காண்கிறான்.

**என் தேவன் தம் தூதனை அனுப்பினார்; அவர் சிங்கங்களின் வாய்களை அடைத்தார். நான் அவர் பார்வையில் குற்றமற்றவனாகக் காணப்பட்டதால், அவை எனக்குத் தீங்கு செய்யவில்லை. மேலும், அரசே, உமக்கு முன்பாக நான் ஒருபோதும் எந்தத் தவறும் செய்ததில்லை.**

தானியேல் 6:22

## வாழ்க்கைக்கான பாடங்கள்:

- ✔ **விசுவாசத்திற்கு பெரும்பாலும் தைரியம் தேவைப்படுகிறது.** நெருக்கடியான சூழல்களிலும், எது சரி என்று நமக்குத் தெரிந்ததில் நாம் உறுதியாக நிற்கும் போது, சில சமயங்களில் அற்புதங்கள் நிகழ்கின்றன.
- ✔ **தேவனின் பாதுகாப்பு உண்மையானது.** மிகவும் சாத்தியமற்ற சூழ்நிலைகளிலும்கூட நம்பிக்கையின் கதிர் ஒளிரும்.
- ✔ **நேர்மை முக்கியமானது.** நேர்மையாகவும் உண்மையாகவும் வாழ்வதில் தானியேல் கொண்டிருந்த அர்ப்பணிப்பு, அவர் ஒரு அற்புதத்தை அனுபவிப்பதற்கு வழிவகுத்தது.
- ✔ **கீழ்ப்படிதலின் மூலம் சாட்சி பகருங்கள்.** தானியேலின் அசைக்க முடியாத விசுவாசம் அவரைக் காப்பாற்றியது மட்டுமல்லாமல், தேவனுடைய வல்லமையை அறிந்துகொள்ளும்படி அரசரையும் மற்றவர்களையும் தூண்டியது.



# சிந்தித்துப் பார்க்க வேண்டிய கேள்விகள்:

1

**உங்கள் தீர்மானம் எது?**

எவ்வளவு விலை கொடுத்தாவது உறுதியாக பாதுகாக்கத் தகுந்தவை என நீங்கள் கருதும் விழுமியங்கள், நம்பிக்கைகள் அல்லது உங்கள் வாழ்க்கையின் அம்சங்கள் யாவை?

2

**நீங்கள் எந்த சிங்கங்களை எதிர்கொண்டிருக்கிறீர்கள்?**

வெற்றி பெறவே முடியாது என்று நீங்கள் கருதும் ஏதேனும் சவால்கள், அச்சங்கள் அல்லது அழுத்தங்களை எதிர்கொண்டிருக்கிறீர்களா?

3

**நீங்கள் விசுவாசத்தோடு எடுத்து வைக்கவேண்டிய அடி எது?**

விளைவு நிச்சயமற்றதாக அல்லது ஆபத்தானதாக இருந்தாலும், இன்று உங்களால் என்ன துணிச்சலான அடியை எடுத்து வைக்க முடியும்?

குறிப்பு

நாங்கள் உங்களுக்காக ஜெபிக்க நீங்கள் விரும்பினால், உங்கள் ஜெப விண்ணப்பங்களை இங்கே தாராளமாக விட்டுச் செல்லுங்கள்!

# எங்கள் அற்புதப் பயணம்



எங்கள் மகன் ஜாக் (Zac) 10 மாதக் குழந்தையாக இருந்தபோது, அவனுக்கு மூளைத் தொற்று ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்தான். அதன் விளைவாக, அவனது மூளை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அவனால் தானாக சுவாசிக்கவோ, சாப்பிடவோ, நடக்கவோ, பேசவோ அல்லது தூங்கவோ முடியவில்லை. நான்கு நீண்ட ஆண்டுகளாக, எங்கள் மகனை குணப்படுத்தும்படி நாங்கள் இடைவிடாமல் ஜெபித்து, கடவுளிடம் மன்றாடினோம். இறுதியில், மார்ச் 2025-ல் அவன் காலமானான்.

ஆம், ஒரு அதிசயத்தின் கடுமையான தேவை எப்படி இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும்.

நாங்கள் மிகவும் விரும்பிய உடல்ரீதியான குணமடைதலை ஜாக் (Zac) ஒருபோதும் பெறவில்லை என்றாலும், அந்த முழு பயணத்திலும் நாங்கள் பல பெரிய மற்றும் சிறிய அதிசயங்களைக் கண்டோம்.

இலட்சக்கணக்கான மருத்துவமனை கட்டணங்கள் நொடிப்பொழுதில் செலுத்தப்பட்டதை நாங்கள் கண்டோம். உலகின் தலைசிறந்த குழந்தைகளுக்கான மருத்துவமனைகளுள் ஒன்றின் அருகே நாங்கள் குடியேற கடவுள் ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்தார். எங்களுக்குத் தேவைப்பட்ட ஒவ்வொரு முறையும், சரியான மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் சிகிச்சையாளர்கள் அற்புதமாகத் தோன்றினார்கள்.

பின்னர், ஜாக் (Zac) மரித்தபோது, அவன் எல்லாவற்றிக்கும் மேலான வரத்தைப் பெற்றான்: பரலோகத்தில் இயேசுவுடன் நித்திய ஜீவனைப் பெறுதல். நாம் நித்திய ஜீவனைப் பெறும்பொருட்டு இயேசு மரித்தார் என்பதே நற்செய்தியின் மூல கருத்து (யோவான் 3:16). அது உங்களுக்கும் கிடைக்கின்றது!

*எங்களுக்குத் துணையாக நின்ற மக்களின் ஆதரவு இல்லாமல், எங்கள் மகனின் நோயையும் இழப்பையும் நாங்கள் கடந்து வந்திருக்க முடியாது.*

*தினசரி ஊக்கத்தைப் பெறுவதன் முக்கியத்துவத்தை நாங்கள் நேரடியாக உணர்ந்தோம்.*

*இப்போது, நாங்கள் உங்களுக்குத் துணையாக நின்று, ஒவ்வொரு நாளும் உங்களை இயேசுவிடம் வழிநடத்த வேண்டிய தேவை வந்துள்ளது.*

*இதை நாங்கள் எங்களது தினசரி ஊக்கச் செய்திகளான “அனுதினமும் ஒரு அதிசயம்” மூலம் செய்கிறோம்.*

எங்கள் தினசரி ஊக்கத்தைப் பெற்றுக்கொள்ள



# 4 பிறவியிலேயே பார்வையற்ற ஒரு மனிதன்

**உலகத்தையே பார்த்திராத ஒரு மனிதனை**க் கற்பனை செய்து பாருங்கள். பிறவியிலேயே பார்வையற்றவனான அவன், தன் வாழ்நாள் முழுவதும் இருளில்தான் வாழ்ந்திருக்கிறான். ஒவ்வொரு நாளும், அவன் சாலையோரத்தில் அமர்ந்து, அவ்வழியே செல்பவர்கள் அவனது கிண்ணத்தில் போடும் சில நாணயங்களுக்காகக் காத்திருக்கிறான். தன்னிடம் யாரும் அதிகம் பேசாத நிலையிலும், இத்தனை குரல்களையும், இத்தனைக் காலடி ஓசைகளையும் கேட்கும்போது அவனுக்கு எப்படிப்பட்ட உணர்வு இருந்திருக்கும்? நாள் முழுவதும் முற்றிலும் புறக்கணிக்கப்படுவதை அவன் எப்படி உணர்ந்திருப்பான்?

ஆனால், **இயேசு அங்கு வருகிறார்**. இயேசு அவனைப் பார்க்கிறார். சமூகத்தின் விளிம்பில் இருக்கும் ஒரு நபராக மட்டுமல்ல, ஒரு மனிதனாக அவனைப் பார்க்கிறார். அவனுடைய தேவையையும், வலியையும், ஆற்றலையும் அவர் காண்கிறார். இயேசு, மிகுந்த இரக்கத்துடனும், இதைவிட மேலான ஒன்றுக்கான வாக்குறுதியுடனும் அவனைப் பார்க்கிறார்.

இயேசுவின் பார்வையை கவனித்த சீடர்கள், துன்பத்தில் இருக்கும் எவரும் கேட்க விரும்பாத ஒரு கேள்வியைக் கேட்டார்கள்: **“ ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்?”** (யோவான் 9:2). இன்றைய நாளிலும் யாரவது துன்பப்படுவதைப் பார்த்து நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கும்படி, நாம் கேட்க முற்படும் அதே கேள்விகள்: “ஏன்? என்ன நடந்தது? என்ன தவறு ஆயிற்று?”, என்பதுபோல்.

**ஆனால் இயேசுவோ, பழி சுமத்தும் போக்கை நிராகரிக்கிறார். அதற்குப் பதிலாக, அவர் மிகவும் ஆழமான ஒன்றைச் சுட்டிக்காட்டுகிறார்:**

> **“அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான்.”**
> யோவான் 9:3

சில சமயங்களில், நம்மை வரையறுப்பதாக நாம் நினைக்கும் விஷயங்களான நமது போராட்டங்கள், வலிகள், வரம்புகள் போன்றவையே, பெரிய விஷயங்கள் நிகழ்வதற்கான களங்களாக அமைகின்றன. **ஒரு சாபம் போலவோ அல்லது ஒருவரின் வாழ்வில் மாற்ற முடியாத ஒரு பகுதி போலவோ தோன்றுவது, ஒரு அற்புதத்திற்கான களமாக மாறக்கூடும்.**

அதன்பின், **இயேசு எதிர்பாராத ஒன்றைச் செய்கிறார்.** இயேசு ஒரே ஒரு வார்த்தையால் அந்த மனிதனைக் குணப்படுத்தியிருக்க முடியும். ஒரு எளிய "குணமாவாயாக!" அவ்வளவுதான்: உடனே பார்வை பெற்றிருப்பான், அல்லவா?

மாறாக, **"அவர் தரையிலே துப்பி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசினார்..."** (யோவான் 9:6). அது பார்ப்பதற்கு அசௌகரியமாகவும், மிகவும் விசித்திரமானதாகவும் இருந்தது. ஒரு அற்புதம் இப்படி நடக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனாலும், இயேசு அந்த மனிதனைத் தம்மை நம்பும்படி கேட்கிறார். மேலும், சீலோவாம் குளத்திற்குச் சென்று கழுவிக்கொள்ளும்படியும் அவனிடம் கூறுகிறார்.

அந்த மனிதன், விசித்திரமான செயல்பாடுகள் இருந்தபோதிலும், கீழ்ப்படிகிறான். அவன் இயேசுவிடம் கேள்வி கேட்டிருக்கலாம். அவன் சந்தேகித்திருக்கலாம். இயேசுவுக்குக் கீழ்ப்படியாமல், தன் கண்களில் சேறு படிந்திருக்க, தானாகவே குணமாகும் என்று காத்திருந்து, இருந்த இடத்திலேயே அவன் இருந்திருக்கலாம். ஆனால் அவன் செவிகொடுக்கிறான். அவன் தன் கண்களிலிருந்து சேற்றைக் கழுவியபோது, அவன் பார்வை அடைகிறான். தன் வாழ்வில் முதன்முறையாக, அவனால் உலகை அதன் முழு வண்ணத்திலும் அழகிலும் காண முடிந்தது.



**நாம் நமது எதிர்பார்ப்புகளைக் கைவிட்டு, வாழ்க்கையின் குழப்பங்களுக்கு மத்தியிலும் ஆண்டவரால் மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்று விசுவாசிக்க வேண்டும்.**

இந்தக் கதையைப் பாருங்கள்

## வாழ்க்கைக்கான பாடங்கள்:

- **கடந்த காலத்தை அல்ல, சாத்தியக்கூறுகளைக் காணுங்கள்.** கடவுள் மக்களின் கடந்த காலத்தைத் தாண்டி, அற்புதங்களுக்கான சாத்தியக்கூறுகளைக் காண்கிறார். நாமும் அவ்வாறே செய்தால் என்ன?
- **அற்புதங்கள் எதிர்பாராத வழிகளில் நிகழ்கின்றன.** நாம் புரிந்துகொள்ள முடியாத வழிகளிலும் கூட மாற்றம் ஏற்படலாம்.
- **நீங்கள் குணம்பெறுவதில் சில கடினமான தருணங்களைக் கையாள ஆண்டவர் அஞ்சுவதில்லை.**
- நாம் நமது மிகப்பெரிய **பலவீனமாகக் கருதுவது, நாம் மாபெரும் மாற்றத்தைப்** பெறும் இடமாக அமையலாம்.
- **கீழ்ப்படிதலே முக்கியம்.** மாற்றத்தை அனுபவிப்பதற்கு முன் அந்த மனிதன் செயல்பட வேண்டியிருந்தது.



# சிந்தித்துப் பார்க்க வேண்டிய கேள்விகள்:

1

## உங்கள் வாழ்வில் எந்த இடங்களில் குணம்பெறுதல் தேவைப்படுகிறது?

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் குணமடைய மிகவும் ஏங்கும் மற்றும் தேவைப்படும் பகுதிகள் ஏதேனும் உள்ளதா?

2

## நீங்கள் தவிர்க்கும் விஷயங்கள் எவை?

உங்கள் வாழ்க்கையில், வழக்கத்திற்கு மாறான அல்லது சில சங்கடமான விஷயங்கள் உங்களை குணமாக்கக்கூடும் என்றாலும், அவற்றை நீங்கள் எதிர்க்கும் தருணங்கள் உள்ளதா?

- அந்தக் கடினமான உரையாடலா?
- ஒரு ஆலோசகருடன் சந்திப்பா?
- நீங்கள் தவிர்த்து வரும் பொறுப்புடைமைக் குழுவா (accountability group)?
- நீங்கள் ஒப்புக்கொண்டு அறிக்கையிட பயப்படும் ஏதேனும் ஒரு விஷயமா?

3

## விசுவாசத்துடன் நீங்கள் எடுத்து வைக்க விரும்பும் அடி எது?

தற்போது அது குழப்பமாகத் தோன்றினாலும், இயேசு உங்களுக்குள் என்ன செய்ய முயற்சிக்கிறார்?

குறிப்பு

**முதல் அடி எடுத்து வைப்பது கடினம்! எங்கள் volunteers (தன்னார்வலர்கள்), உங்கள் அடையாளம் வெளிப்படாமல், இலவசமாக உங்களுக்கு செவிகொடுக்கக் காத்திருக்கிறார்கள்.**

# உங்கள் அதிசயத்தை எல்லாருமே கொண்டாட மாட்டார்கள்

**பிறவியிலேயே பார்வையற்ற அந்த மனிதனுக்குப் பார்வை வந்த அந்தத் தருணத்தில், அவர் பேரானந்தம் அடைந்திருக்க வேண்டும். அவரை அறிந்திருந்தவர்கள் அவருடன் சேர்ந்து கொண்டாடியிருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கலாம்...**

ஆனால் அதற்கு பதிலாக, மக்கள் சொன்னது:

"இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா?"

"இல்லை," என்றார்கள் மற்றவர்கள்,

"அவனுடைய சாயலாயிருக்கிறான், அவ்வளவுதான்!"

"இது சாத்தியமில்லை!"

மக்கள் சந்தேகித்தனர்.
மக்கள் நிராகரித்தனர்.
மக்கள் மறுத்தனர்.

ஏன்? ஏனென்றால், அற்புதங்கள் நமது வகைப்பாடுகளுக்குச் சவால் விடுகின்றன. நமக்குத் தெரியும் என்று நாம் நினைத்திருந்தவற்றையே நம்மைக் கேள்வி கேட்க வைக்கின்றன.

"உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி..." (யோவான் 9:10-11)

அவ்வளவுதான்.
**இயேசு. சேற்றை. உண்டாக்கினார்.**

அது பகட்டானதாக இருக்கவில்லை. அதில் சிறிதும் தர்க்கம் இருக்கவில்லை. இறையியல் ரீதியாக நேர்த்தியாகவும் இல்லை. ஆனால், அது பலனளித்தது.

யோவான் 9-ஆம் அதிகாரத்தின் மீதிப் பகுதி, அது மிகவும் சோகமாக இல்லாதிருந்தால், கிட்டத்தட்ட நகைச்சுவையாக இருந்திருக்கும். அந்த மனிதன் ஒரு குற்றவாளியைப் போல விசாரிக்கப்படுகிறான். அவனுடைய பெற்றோரைக்கூட இதில் இழுத்து வருகிறார்கள்!

ஆனால், முன்பு பார்வையற்றிருந்த அந்த மனிதன் மீண்டும் மீண்டும் இதையேக் கூறுகிறான். (யோவான் 9:25)

**"நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்."**

அவனுக்கு எல்லா பதில்களும் தெரிந்திருக்கவில்லை. அவன் வேதாகமப் பட்டம் பெற்றிருக்கவில்லை, வேதவசனங்களையும் மனப்பாடம் செய்திருக்கவில்லை. ஆனால், அவனிடம் அவனுடைய சாட்சி இருந்தது. அவன் தேவனுடைய வல்லமைக்குச் சாட்சியாக இருந்து, அதைப் பற்றிக்கொண்டான்.

ஒருவேளை உங்களுக்கும் ஒரு சாட்சியம் இருக்கலாம். பிறவிக்குருட்டிலிருந்து குணமடைந்ததைப் போல அது பெரியதாக இல்லாமல் இருக்கலாம், ஆனாலும், தேவன் சந்தேகத்திற்கு இடமின்றி உங்கள் வாழ்வில் வல்லமையான காரியங்களைச் செய்திருக்கிறார்.

உங்கள் சாட்சியத்தை இங்கே பகிரவும்

# அவர்கள் உங்களை நம்பவில்லை என்றால் என்ன செய்வது?

யோவான் 9-ஆம் அதிகாரத்தில் குணமாக்கப்பட்ட பார்வையற்றவரைப் போலவே, நீங்கள் ஒரு அற்புதத்தை அனுபவிக்கும்போது எல்லோரும் உங்களை நம்ப மாட்டார்கள்.

சிலர் உங்கள் கதையைப் புறக்கணிக்கக்கூடும்.

உங்கள் வாழ்வில் நிகழும் ஒரு அற்புதத்தை மற்றவர்கள் கேள்வி கேட்கும்போது அல்லது சந்தேகிக்கும்போது, அது சவாலாக அமையலாம். நீங்கள் செய்யக்கூடிய சில விஷயங்கள் இதோ.



## 01 உங்கள் சத்தியத்தில் உறுதியாக நில்லுங்கள்

உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். மற்றவர்கள் அதை முழுமையாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும், உங்கள் கதை மதிப்புமிக்கதும் வல்லமை வாய்ந்ததுமாகும்.

## 02 அதை தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொள்ளாதீர்கள்

இது உங்களைப் பற்றியது அல்ல; தாங்களே அனுபவிக்காத ஒன்றை மற்றவர்களால் புரிந்துகொள்வது கடினம், அவ்வளவுதான்.

## 03 கருணையுடன் கையாளுங்கள்

எல்லா பதில்களும் உங்களிடம் இருக்க வேண்டும் என்ற எண்ணமின்றி, கேள்விகளுக்கு இடமளித்து, பணிவுடனும் பொறுமையுடனும் பதிலளியுங்கள்.

## 04 மாற்றத்தை வாழ்ந்து கொண்டே இருங்கள்

நடந்தவற்றுக்கு உங்கள் வாழ்க்கையே மாபெரும் சாட்சி. உங்கள் வார்த்தைகளை விட உங்கள் செயல்களும் மனப்பான்மையும் உரக்கப் பேசட்டும்.

## 05 புரிதலுக்காகப் ஜெபம் செய்யுங்கள்

மற்றவர்களின் சந்தேகங்களை கண்ணியமாகக் கையாளும் வலிமையையும், விரக்திக்குப் பதிலாக அன்புடன் பதிலளிக்கும் ஞானத்தையும் தேவனிடம் கேளுங்கள்.



# 5 ஜனங்களை போஷித்தல்

இயேசு இஸ்ரவேல் முழுவதும், ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் பயணம் செய்து, வார்த்தைகளாலும் செயல்களாலும் தேவனின் அன்பைப் பகிர்ந்துகொண்டார். அவர் **நோயுற்றவர்களையும் பார்வையற்றவர்களையும் குணமாக்கினார், துன்புற்றோருக்கு அமைதியைக் கொண்டுவந்தார்.** தங்களின் இக்கட்டான சூழ்நிலைகளின் மத்தியிலும், **மக்கள் தாங்கள் கவனிக்கப்படுவதாகவும் தங்கள் குரல் கேட்கப்படுவதாகவும் உணர்ந்தார்கள்.**

ஒரு நீண்ட நாளுக்குப் பிறகு, சீடர்கள் மிகவும் களைத்துப் போயிருந்தனர். நம்பிக்கைக்காக ஏங்கியும், குணமடைவதற்காகத் தவித்தும், மக்கள் கூட்டம் எல்லாத் திசைகளிலிருந்தும் நெருக்கிக்கொண்டிருந்தது. **தம் நண்பர்களின் கண்களில் இருந்த களைப்பைக் கண்ட இயேசு**, அவர்களை மென்மையாகத் தம் அருகில் அணைத்துக்கொண்டு, இவ்வாறு கூறினார்:

> **“வனாந்தரமான ஓரிடத்தில் தனித்து சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்…”**
>
> மாற்கு 6:31

எனவே அவர்கள் ஒரு படகில் ஏறி, கரையிலிருந்து புறப்பட்டு, தனிமையை நோக்கி காற்று தங்களைச் சுமந்து செல்ல அனுமதிக்கிறார்கள். சூரிய ஒளியில் நீர் மின்னுகிறது, ஒரு கணம் அவர்கள் இறுதியாக ஒருவித அமைதியைக் கண்டது போல் தோன்றுகிறது.

ஆனால், **ஓய்வு காத்திருக்க வேண்டியிருந்தது.**

படகு தொலைதூரக் கரையை நெருங்கும்போது, அவர்கள் ஒரு அசைவைக் கண்டார்கள்—பத்துக்கும் மேற்பட்ட உருவங்கள், பின்னர் நூற்றுக்கணக்கானோர், கடற்கரையோரமாக விரைந்து ஓடிக்கொண்டிருந்தனர். **செய்தி பரவியிருந்தது.** மக்கள் **இயேசுவை அடைய வேண்டும் என்ற தாகத்துடன்** அவரை நோக்கி ஓடிவந்தார்கள். அங்கே அவர்கள் இப்போது காத்துக்கொண்டிருந்தார்கள்.

வேறு எந்தத் தலைவராக இருந்தாலும் விரக்தியுடன் பெருமூச்சு விட்டிருப்பார் அல்லது அவர்களை அனுப்பிவிட்டிருப்பார். ஆனால் இயேசு புல்வெளியின் மீது கால் வைத்து, அந்த மாபெரும் கூட்டத்தைக் கண்டபோது, **அவருடைய இதயம் இரக்கத்தால் உருகியது.** அந்தக் கூட்டம், மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல, அலைந்து திரிந்து, காயப்பட்டு, மேலும் பசியுடன் இருந்தது.



ஆகவே **இயேசு அவர்களை வரவேற்றார்.** மேலும் அவர் அவர்களுக்குப் பல காரியங்களைப் போதிக்கத் தொடங்கினார். சூரியன் மெல்ல மறைந்து கொண்டிருக்க, மக்கள் அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்க, அவர் சீர்படுதல் மற்றும் நம்பிக்கை பற்றிய வார்த்தைகளைப் பேசுகிறார்.

இறுதியில், சீடர்கள் கவலை தோய்ந்த முகங்களுடன் அவரை அணுகினார்கள். அவர்கள் ஆள் நடமாட்டம் இல்லாத ஓர் இடத்தில், பசியால் உறுமிக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களால் சூழப்பட்டிருந்தனர். விரைவில் மாலைப் பொழுது சூழவிருந்தது.

**“இது வனாந்தரமான இடம், வெகுநேரமுமாயிற்று: புசிக்கிறதற்கும் இவர்களிடத்திலே ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.”**

மாற்கு 6:35-36

ஆனால் இயேசுவோ அவர்களுக்கு ஒரு வியப்பூட்டும் பதிலை அளித்தார்:

**“நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார்.”**

மாற்கு 6:37

ஐயாயிரம் ஆண்கள், அதோடு பெண்களும் குழந்தைகளும் என அனைவருக்கும் உணவளிக்க வேண்டும் என்பதை அறிந்ததும் அவர்களின் கண்கள் விரிந்தன. அவர்களிடம் இருந்த உணவுப்பொருட்களை கணக்கிட்டனர், அவர்கள் கைகளில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மட்டுமே இருந்தன. அது போதவே போதாது. ஆனால் இயேசு, தங்களிடம் உள்ளதைக் கொண்டுவருமாறு அவர்களிடம் கேட்டார்.

ஆகவே, அற்பமாகத் தோன்றிய அந்தச் சிறிய பொருட்களை அவர்கள் அளித்தனர். இயேசு அதைத் தம் கைகளில் எடுத்து, வானத்தை நோக்கி உயர்த்தி, ஆசீர்வதித்து, அதைப் பிட்கத் தொடங்கினார். துண்டு துண்டாக அதன் பகுதிகளை அவர்களுடைய கைகளில் வைத்தார்.

பின்னர் அற்புதம் நிகழ்ந்தது. சீடர்கள் கூட்டத்திற்குள் உணவைக் கொண்டு சென்றார்கள். அவர்கள் ஒவ்வொரு முறை இயேசுவிடம் திரும்ப வந்தபோதும், அவர்களுக்காக இன்னும் அதிகமான உணவு காத்திருந்தது. அந்தச் சிறிய உணவு ஒரு பெரும் விருந்தாக மாறியது. அனைவரும் வயிறார உண்ணும் வரை சீடர்கள் தொடர்ந்து உணவைப் பரிமாறினார்கள்; சிரிப்பும் பகிர்வும் அந்தச் சூழலை நிரப்பியது.

எல்லாம் முடிந்தபோது, பன்னிரண்டு கூடைகள் நிறைய மீதமிருந்தது—ஆரம்பத்தில் இருந்ததை விட முடிவில் மிகுதியாகவே இருந்தது.

இந்தக் கதையைப் பாருங்கள்



### வாழ்க்கைக்கான பாடங்கள்:

- ✓ **ஆண்டவரால் உங்களிடம் உள்ளதைப் பெருகச் செய்ய முடியும்.** நம் கைகளில் சிறியதாகவோ அல்லது முக்கியமற்றதாகவோ தோன்றுவதைக் கூட, ஆண்டவரிடம் அர்ப்பணிக்கும்போது அது வல்லமையானதாக மாறும்.
- ✓ **தாராள மனப்பான்மை முக்கியமானது.** நேரம், திறமை அல்லது வளங்கள் என எதுவாக இருந்தாலும், சிறிய அளவிலான கொடைச் செயல்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும்.
- ✓ **நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் மிக முக்கியமானவை.** இயேசு மக்களுக்கு எப்படி உணவளிக்கப் போகிறார் என்பது சீடர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை, ஆனாலும் அவர்கள் அவருடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றினார்கள். அந்தப் பணி சாத்தியமற்றதாகத் தோன்றியபோதும், அவர்களுடைய கீழ்ப்படிதல் ஒரு அற்புதத்திற்கு வழி திறந்தது.
- ✓ **தேவன் அபரிமிதமாக கொடுப்பார்.** தேவன் போதுமான உணவை மட்டும் அளிக்கவில்லை; தேவைக்கு அதிகமாகவே இருந்தது—பன்னிரண்டு கூடைகள் நிறைய மீத உணவு. அவருடைய ஏற்பாடு, நாம் எதிர்பார்ப்பதை அல்லது கற்பனை செய்வதை விட பெரும்பாலும் அதிகமாகவே இருக்கிறது.

# கேள்விகள்:

## 1

### உங்கள் "அப்பங்களும் மீன்களும்" என்னென்ன?

உங்கள் வாழ்க்கையில் என்னென்ன அப்பங்களும் மீன்களும் இருக்கின்றன? எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாத அளவுக்கு மிகச் சிறியதாகத் தோன்றும் திறமைகள், நேரம் அல்லது வளங்கள் உங்களிடம் உள்ளதா?

## 2

### நீங்கள் மற்றவர்களை எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

உங்களிடம் ஏற்கனவே உள்ளவற்றைக் கொண்டு ஆண்டவர் மற்றவர்களை எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

## 3

### நீங்கள் பகிரத் தயாராக இருக்கிறீர்களா?

உங்களிடம் உள்ளதைப் பகிர்ந்துகொள்ளவும், அது உங்கள் கற்பனைக்கு எட்டாத வழிகளில் பெருகும் என்று நம்பவும் நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

## அதிசயங்களால் குறிக்கப்பட்ட

# உங்கள் வாழ்க்கை

இங்கு சற்று இடைவெளி எடுப்போம்.

நான் ஆரம்பத்தில் சொன்னது போல, நீங்கள் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருப்பதால்தான் இந்தப் பயணத்தைத் தொடங்கியிருக்க வாய்ப்புள்ளது.

நீங்கள் தேடிக்கொண்டிருப்பது ஒருவேளை நம்பிக்கையாக இருக்கலாம், குணம்பெறுதலாக இருக்கலாம் அல்லது உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் தேவைப்படும் ஒரு திருப்புமுனையாகக் கூட இருக்கலாம்.

உங்கள் சொந்த வாழ்வில் ஆண்டவரின் அற்புதங்கள் நிகழ்வதை நீங்கள் அனுபவிப்பீர்கள் என்பதே எங்கள் ஜெபம். இந்த ஜெபத்தை எங்களுடன் சேர்ந்து ஜெபிக்கத் தயங்காதீர்கள், அல்லது உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் நீங்கள் ஜெபிக்கலாம். அவர் செய்து கொண்டிருப்பவற்றைக் காண உங்கள் இதயத்தையும் கண்களையும் திறக்கும்படி ஆண்டவரிடம் கேளுங்கள்:

“இறைவா, இந்த அற்புதங்களின் மூலம் உமது வல்லமையையும், அக்கறையையும், அன்பையும் வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி.

உம்மை நம்பவும், விசுவாசத்துடன் முன்னேறவும், என் வாழ்வில் நிகழும் பெரிய மற்றும் சிறிய அற்புதங்களை அடையாளம் காணவும் எனக்கு உதவுவீராக.

நீர் செயல்படும் விதங்களைக் காண என் கண்களைத் திறந்தருளும், உமது கதையின் ஒரு பகுதியாக இருப்பதற்கான தைரியத்தை எனக்குத் தந்தருளும்.
ஆமென்.”

*எங்கள் தினசரி தியானத்தின் மூலமாக ஆண்டவருடைய அற்புதங்களின் வல்லமையைக் கண்டறியுங்கள்:*
*ta.jesus.net/miracle*



# 6 தண்ணீரின் மேல் நடப்பது

இயேசு வெறும் ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு உணவளித்தார். இத்தகைய அற்புதச் செயலுக்குப் பிறகு, அவர் ஜெபம் செய்வதற்காக ஒரு மலையின் மேல் ஏறிச் சென்றபோது, தம் சீடர்களை ஒரு படகில் முன்னால் அனுப்பிவிட்டார் (மத்தேயு 14:27).

சீடர்கள் தண்ணீரின் மீது, காற்றையும் அலைகளையும் எதிர்த்துப் போராடி, சோர்வுடனும் கவலையுடனும் இருந்தார்கள். இரவு வந்தது, **புயல் மேலும் வலுவானது.** இது அச்சம், நிச்சயமற்ற தன்மை மற்றும் பலவீனம் நிறைந்த ஒரு தருணமாக இருந்தது.

புயலின் நடுவில், **இயேசு தண்ணீரின் மீது நடந்து சீடர்களை நோக்கி வந்தார்.** தாங்கள் ஒரு பேயைக் காண்பதாக எண்ணி, அவர்கள் திகிலடைந்தார்கள்.

> **“உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.”**
>
> மத்தேயு 14:27

எப்போதும் துணிச்சலும் அவசர குணமும் கொண்டப் பேதுரு இவ்வாறு பதிலளிக்கிறான்:

> **“ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான்.”**
>
> மத்தேயு 14:28

இயேசு அவனை அழைக்கிறார். **பேதுரு படகிலிருந்து இறங்குகிறான்,** ஒரு கணம், அவனால் சாத்தியமில்லாததைச் செய்கிறான்: அவன் தண்ணீரின் மீது நடந்து இயேசுவை நோக்கிச் செல்கிறான்! அவனது உற்சாகத்தையும் பயத்தையும், வேறு யாரும் செய்யத் துணியாத ஒன்றைச் செய்வதில் ஏற்பட்ட சிலிர்ப்பையும் கற்பனை செய்து பாருங்கள்.



ஆனால் விரைவில், பேதுரு காற்றையும் அலைகளையும் கவனிக்கிறான். பயம் அவனை ஆட்கொள்ள, அவன் மூழ்கத் தொடங்குகிறான்.

**“காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான்.”**

*மத்தேயு 14:30*

இந்தத் தருணம் ஒரு வலிமையான உண்மையை உணர்த்துகிறது: **விசுவாசத்திற்கும் பயத்திற்கும் இடையிலான பதற்றத்தில்தான் அற்புதங்கள் பெரும்பாலும் நிகழ்கின்றன.** நீங்கள் தைரியமாக அடி எடுத்து வைக்க நினைத்தாலும், சாத்தியமானதை நீங்கள் காணமுடியாதபடிக்கு பயம் உங்களைத் தடுக்கலாம். இயேசு தம் கைகளை நீட்டிப் பேதுருவைப் பிடிக்கிறார்:

**“உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.”**

*மத்தேயு 14:31*

இயேசு அமைதியாகவும், உறுதியாகவும், சூழ்நிலையை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டிலும் வைத்திருந்தார். அவர் பேதுருவைக் கடுமையாகக் கடிந்துகொள்ளவில்லை; **இயேசு அவரை விசுவாசிக்கும்படி மட்டுமே அழைத்தார்.** புயல் தொடர்கிறது, ஆனால் பேதுரு பாதுகாப்பாக இருந்தார்.

சீடர்களின் எதிர்வினை
மீண்டும் படகிற்குத் திரும்பியதும், புயல் அடங்கியது, சீடர்கள் வழிபட்டனர்:

**அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள்.**

*மத்தேயு 14:32-33*

அவர்கள் ஒரு அற்புதத்தைக் கண்டிருந்தார்கள், விசுவாசம் சோதிக்கப்படுவதைப் பார்த்திருந்தார்கள், மீட்பையும் அனுபவித்திருந்தார்கள். அவர்களுடைய கண்ணோட்டம் பயத்திலிருந்து நன்றியுணர்விற்கு மாறியது.



## வாழ்க்கைக்கான பாடங்கள்:

- **அற்புதங்களுக்குத் தைரியம் தேவை.** பேதுரு பயத்தை மீறி படகிலிருந்து வெளியேறினார். விளைவு நிச்சயமற்றதாக இருந்தாலும், துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க அற்புதங்கள் உங்களைத் தூண்டக்கூடும்.
- **கவனம் முக்கியமானது.** பேதுரு இயேசுவின் மீது கவனம் செலுத்தியபோது, அவர் தண்ணீரின் மீது நடந்தார்; புயலின் மீது கவனம் செலுத்தியபோது, அவர் மூழ்கத் தொடங்கினார். உங்கள் கவனம் உங்கள் அனுபவத்தை வடிவமைக்கிறது.
- **உதவி அருகிலேயே உள்ளது.** நீங்கள் தடுமாறத் தொடங்கும்போதும், மீட்பு உங்களுக்கு உண்டு. உங்கள் போராட்டங்களில் நீங்கள் தனியாக இல்லை.
- **விசுவாசமும் சந்தேகமும் ஒருங்கே நிலவுகின்றன:** நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லும்போதும் பயப்படுவது இயல்பானது. நம்மைக் காப்பாற்றக்கூடியவரை நோக்கித் தொடர்ந்து பார்ப்பதே இதற்கான திறவுகோல்.

# கேள்விகள்:

## 1 இன்று உங்களுக்கு என்னென்ன சவால்களைத் தருகின்றன?

*இன்று நீங்கள் சந்திக்கும் "புயல்கள்" எவை—அதாவது, சிரமப்படுவது போலவோ, தனிமையாகவோ, அல்லது மிகுந்த மன அழுத்தத்துடனோ உணரும் சூழ்நிலைகள் யாவை?*

## 2 உங்களால் உங்கள் கவனத்தை மாற்ற முடியுமா?

*உங்கள் கவனத்தை பயத்திலிருந்து நம்பிக்கைக்கும், பிரச்சனைகளிலிருந்து வாய்ப்புகளுக்கும் எப்படி மாற்றுவது?*

## 3 ஒரு துணிச்சலான அடியை எடுத்து வைக்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

*உங்கள் படகிலிருந்து வெளியே வரத் துணிவீர்களா? அது சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், ஒரு துணிச்சலான அடியை எடுத்து வைக்குமாறு தேவன் உங்களை எங்கே கேட்கிறார்?*



# அனுதினமும் ஒரு அதிசயம்

இந்த அற்புதக் கதைகள் உங்களுக்கு உத்வேகமும் ஊக்கமும் அளித்தால், உங்கள் அன்றாட வாழ்வில் ஆண்டவரின் பிரசன்னத்தையும் அற்புதங்களையும் அனுபவிப்பது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்!

நீங்கள் எங்கள் தினசரி செய்திகளை இலவசமாக பெற்றுக்கொள்ள பதிவுசெய்திருந்தால், "**அனுதினமும் ஒரு அதிசயம்**", ஒவ்வொரு நாள் காலையிலும் உங்கள் இன்பாக்ஸில் ஒரு சிறிய, ஊக்கமளிக்கும் செய்தியைப் பெறுவீர்கள்.

சாதாரணமானவற்றில் உள்ள அசாதாரணமானதைக் கவனிக்க உங்களுக்கு உதவும் ஒரு பைபிள் வசனம், ஒரு சிந்தனை மற்றும் ஒரு ஜெபம். மேலும், உங்கள் வாழ்வில் நீங்கள் ஏங்கும் திருப்புமுனைக்காகத் தொடர்ந்து ஜெபிக்கவும்.

**ஆம்,'அனுதினமும் ஒரு அதிசயம்' செய்திகளைப் பெற விரும்புகிறேன்!**

இன்றே இலவசமாக பதிவு செய்யுங்கள், ஒவ்வொரு நாளும் தேவன் தமது நன்மையால் உங்களை ஆச்சரியப்படுத்தட்டும்!

இப்போது கடைசிப் பகுதிக்குச் செல்வோம்.

GET IT ON Google Play

Download on the App Store



# ஆறு அற்புதங்கள், ஒரே கடவுள்

நாம் ஆறு வியக்கத்தக்க அற்புதங்களை ஆராய்ந்துள்ளோம்:

1. **கடனில் இருந்த ஒரு விதவை:** மிகுந்த தேவையிலிருந்த ஒரு குடும்பத்திற்கு உதவுவதற்காக, தேவன் ஒரு சிறிய ஜாடி எண்ணெயைப் பெருகச் செய்தார்.
2. **செங்கடல் பிளக்கப்பட்டது:** வழி இல்லாத இடத்தில் தேவன் ஒரு வழியை உண்டாக்கி, தம் மக்களை ஆபத்திலிருந்து மீட்டார்.
3. **சிங்கக் குகையில் தானியேல்:** உயிருக்கு ஆபத்தான ஒரு சூழ்நிலையில் தேவன் தானியேலைப் பாதுகாத்தார்; இது, விசுவாசமும் நேர்மையும் முக்கியமானவை என்பதைக் காட்டுகிறது.
4. **பிறவியிலேயே பார்வையற்ற ஒருவருக்கு இயேசு பார்வையை வரவழைக்கிறார்;** இதன் மூலம், சில சமயங்களில் ஒரு வரம்பாகத் தோன்றுவது கூட மாற்றத்திற்கான ஒரு தளமாக அமையக்கூடும் என்பதைக் காட்டினார்.
5. **ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்:** கடவுளின் பராமரிப்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தும் விதமாக, இயேசு அப்பத்தையும் மீன்களையும் பெருகச் செய்தார்.
6. **தண்ணீரின் மீது நடத்தல்:** அற்புதங்களுக்கு பெரும்பாலும் தைரியமும் கவனமும் தேவை என்பதை நமக்கு நினைவூட்டும் வகையில், பேதுரு விசுவாசத்துடன் அடியெடுத்து வைத்தார்.

இந்தக் கதைகளுக்கு இடையே ஒரு பொதுவான அம்சம் உள்ளது: **இவை அனைத்தும், நம்மை கவனித்து, நம் மீது அக்கறைக் கொண்டு, சாதாரண வாழ்க்கையிலேயே அசாதாரணமான வழிகளில் செயல்படத் தயாராக இருக்கும் ஒரு கடவுளைச் சுட்டிக்காட்டுகின்றன.** அந்த அற்புதங்கள் அவற்றை அனுபவித்த மக்களுக்காக மட்டுமே நிகழவில்லை—அவை இன்றும் நமக்கு நம்பிக்கை, விசுவாசம், கீழ்ப்படிதல், தைரியம், தாராள மனப்பான்மை மற்றும் எதிர்நோக்குதல் ஆகியவற்றைப் பற்றி போதிக்கின்றன.

**இந்த ஆறு வியக்கத்தக்க அற்புதங்களை ஆராய்ந்து பார்க்க நேரம் ஒதுக்கியதற்கு நன்றி. ஒவ்வொரு கதையும், அசாதாரணமான மற்றும் அன்றாட வழிகளில் செயல்படும் ஆண்டவரின் வல்லமை, அக்கறை மற்றும் அன்பைக் காண நம்மை அழைக்கிறது.**

இறுதிக் கேள்விகளுக்குத் தயாராக இருக்கிறீர்களா?

# சிந்திக்க வேண்டிய கேள்விகள்

*இந்தக் கேள்விகளைப் பற்றி சிந்திக்க ஒரு கணம் ஒதுக்குங்கள். உங்கள் சொந்த வாழ்க்கையில் நம்பிக்கை, பற்று மற்றும் தைரியம் எவ்வாறு பங்கு வகிக்கக்கூடும் என்பதை நீங்கள் சிந்திக்கும்போது, அவை உங்களுக்கு வழிகாட்டட்டும். அற்புதங்கள் என்பவை கடந்த காலக் கதைகள் மட்டுமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

1. **ஆறு அற்புதங்களுள் எது என்னை மிகவும் கவர்ந்தது, ஏன்?**

2. **இந்தக் கதைகளின் மூலம் நம்பிக்கை, பற்று மற்றும் விசுவாசம் பற்றி நான் என்ன கற்றுக்கொண்டேன்?**

3. **என் சொந்த வாழ்க்கையில், சிறிய அல்லது பெரிய அற்புதங்கள் மூலம் தேவன் ஏற்கனவே செயல்படுவதை நான் எங்கே காண்கிறேன்?**

4. **என் வாழ்வில் ஆண்டவரின் வழிகாட்டுதலுக்கும் சாத்தியக்கூறுகளுக்கும் மேலும் திறந்த மனதுடன் இருக்க நான் என்ன நடவடிக்கை எடுக்கலாம்?**

5. **இந்த அற்புதங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை, மற்றவர்களை ஊக்குவிக்கவும், உதவவும், அல்லது அவர்களுக்கு உத்வேகம் அளிக்கவும் நான் எவ்வாறு பயன்படுத்தலாம்?**

திறந்த மனதுடன் இருங்கள். துணிச்சலுடன் இருங்கள். உங்களைச் சுற்றியுள்ள வாய்ப்புகளை கவனியுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் வாழ்வில் சாத்தியமில்லாததையும் சாத்தியமாக்க ஆண்டவர் தயாராக செயல்படுகிறார் என்று நம்புங்கள். ஆசீர்வதிக்கப்பட்டிருங்கள்!



**“அனுதினமும் ஒரு அதிசயம்” மூலம் தினமும் ஊக்கம் பெற விரும்புகிறீர்களா?**

செயலியை இப்போதே பதிவிறக்கம் செய்யுங்கள்!

GET IT ON Google Play

Download on the App Store

**கேள்விகள் உள்ளதா?**

எங்களைத் தொடர்புகொள்ளத் தயங்காதீர்கள்—உங்களுக்கு உதவ நாங்கள் இருக்கிறோம். எதையும் எங்களிடம் கேளுங்கள்!

Jesus.net